## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

<table>
<tr><td colspan="4">2024-ம் ஆண்டு ஜீன் மாதம்18-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>பாலசுப்பிரமணியன்</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td></td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**18.6.2024 OS.No. 47 /2020 வா.சா. 1 பாலசுப்பிரமணியன் ஆஜர்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

1. நான் எனது வழக்கில் தாவா சொத்துக்களாக 2 அயிட்ட சொத்துக்கள் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். என்னென்ன பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 23.1.2012-ம் தேதி நான் முதலில் கிரையம் பெற்றேன். அதே இடத்தை 13.2.2012-ம் தேதி மீண்டும் கிரையம் செய்துள்ளார்கள். அந்த கிரையத்தை ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் சொத்தானது 1 ஏக்கர் நிலத்தில் தேசிய நெடுஞ்சாலை துறையில் கையகப்படுத்தப்பட்டது போக மீதம் உள்ள 47 செண்ட் 1 வது லக்க சொத்து என்றால் சரிதான்.

2. பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து 1 ஏக்கர் 30 செண்ட் இடம் என்றால் சரிதான். அது 2 ம்லக்க சொத்து என்றால் சரிதான். ஆதியில் நான் கிரையம் வாங்கிய சொத்து மற்றும் பிரதிவாதி கிரைய வாங்கிய சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.126/6 ஆகும். அது 7 ஏக்கர் 19 செண்ட் விஸ்தீரணம்கொண்டதாகும். நான் தாக்கல் செய்துள்ள கிரையம் ஆவணத்தில் சர்வே எண். 126/6B என்றுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 126/6B-ல் 6 ஏக்கர் 40 செண்ட் இடம் உள்ளது என்றால் சரிதான்.

3. சர்வே எண். 126/6B-ல் 6 ஏக்கர் 40 செண்ட் இடத்தில் கீழ்புறத்தில் 1 ஏக்கர் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் யாரிடம் கிரையம் பெற்றேன் என்றால் ராமநாதன் செட்டியார் மகன் வள்ளியப்பசெட்டியார் ஆவார். பிரதிவாதியின் கிரையசான்றாவணமான வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் மேற்படி இடத்தின்

விஸ்தீரணம் 1 ஏக்கர் 30 செண்ட் என்றால் சரிதான். பிரதிவாதி பழனியப்ப செட்டியார் மகன் முத்தையா செட்டியாரிடம் கிரையம் வாங்கியுள்ளார்.

4. ஆதியில் மேற்படி தாவா சொத்து உள்ள இடம் முத்தையா செட்டியார் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் முத்தையா செட்டியார் மற்றும் 28 நபர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். நான் 2012-ல் கிரையம் பெற்ற பிறகு பட்டா மாறுதலுக்கு மனு செய்தேன் என்றால் சரிதான். 2015-ம் வருடம் மனு செய்தேன். மேற்படி மனுவில் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் பிறப்பிக்கப்பட்டது.

5. சர்வே எண்.126/6B-ல் உள்ள மொத்த சொத்தும் 4 உட்பிரிகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.126/6B1-ல் 1.42.00ெஹக்டேர் இடம் பட்டா எண்.1376 ஆக எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.126/6B4 விஸ்தீரணம் 0.40.50 இடம் பட்டா எண்.1376 ஆக எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.126/6B2-ல் விஸ்தீரணம் 0.09.30 ெஹக்டேர் என்பது முத்துராஜா பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.126/6B3-ல் விஸ்தீரணம் 0.67.20 என்ற இடம் பட்டா எண்.930 ஆக பழனியப்பா செட்டியார் மற்றும் 27 நபர்கள் மீது பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். இவை அனைத்தும் நான் கொடுத்த பட்டா மாறுதல் மனுவின் பேரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. தாவா 1 வது லக்க சொத்தில் 53 செண்ட் தேசிய நெடுஞ்சாலைத்துறையில் கையப்படுத்தப்பட்டு இடத்திற்கும், தென்னைமரங்களுக்கும் சேர்த்து நான் இழப்பீடு பெற்றேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தேசிய நெடுஞ்சாலைதுறையினருக்காக அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் சிறப் பு மாவட்ட வருவாய் அலுவர் (நி.எ.தே.நெ) ராமநாதபுரம் என்பவரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். **(உத்தரவு நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி உத்தரவில் எனக்கு எவ்வளவு இழப்பீடு தொகை எந்தெந்த சர்வே எண்களில் எடுக்கப்பட்ட நிலத்திற்காக வழங்கப்பட்டது என்பது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவு 27.3.2017-ம் தேதி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. மேற்படி உத்தரவில் சர்வே எண்.126/6B1 மற்றும் சர்வே எண்.126/6B4 ஆகிய சர்வே எண்களில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு என் பெயரில் இழப்பீடு வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் சர்வே எண்.126/6B3-ல் கையகப்படுத்தப்பட் நிலங்களுக்கான இழப்பீடு தொகை உட்பிரிவு

ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் நிறுத்தப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணம் உத்தரவு தேதியிலேயே வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. மேற்படி உத்தரவில் சர்வே எண்.126/6B3-ல் கட்டுப்பட்ட சொத்துக்களில் தேசிய நெடுஞ்சாலை எடுக்கப்பட்டதற்காக தொகையை மேற்படி இடத்தில் 1 ஏக்கர் 30 செண்ட் இடத்தை சரோஜா என்பவர் அனுபவம் செய்து வருவதாகவும் அந்த இடத்தில் 1580 ச.மீ தேசிய நெடுஞ்சாலைக்காக கையகப்படுத்தியிருப்பதாகவும் அதனால் இழப்பீடு தொகையை சரோஜாவிற்கு வழங்கலாம் என்று இவ்வலுவலக சார்பாய்வாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாகும். பிரதிவாதி சர்வே எண்.126/6B உள்ள இடத்திற்கு அவர் பெயரில் பட்டா வேண்டும் என்றும், மேற்படி இடத்திற்கு என்னுடைய பெயரில் சர்வே எண்.126/6B3A மற்றும் சர்வே எண்.126/6B3C என்று உட்பிரிவு செய்து 1422 என்ற பட்டா எண்ணில் TK8A/194/1426 என்ற நடைமுறை எண்ணில் 23.1.2017-ம் தேதி வழங்கப்பட்ட பட்டாவை ரத்துசெய்யக்கோரியும் சிவகங்கை உட்கோட்ட வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான்.

9. மேற்படி மனுவின் பேரில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வா.சா.ஆ.7 -ல் கட்டுப்பட்ட சொத்தை பொறுத்து எனக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உத்தரவை மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்யப்பட்டு மேற்படி பிரச்சனை பத்திரம் சம்மந்தப்பட்டது என்பதால் நீதிமன்றம் மூலம் நிலுவையில் உள்ள இந்த வழக்கில் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு நிலுவையில் உள்ளபோது மேற்படி சீராய்வு மனுவை விரைந்து முடிக்க மதுரை உயர் நீதிமன்ற கிளையில் WP(MD) No.24772/2022 என்ற மனுவை தாக்கல் செய்து 20 வாரங்களில் விரைந்து முடிக்க வா.சா.ஆ.10 மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. மேற்படி உத்தரவுப்படி சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் 28.10.2023-ல் சீராய்வு மனுவில் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி உத்தரவின் நகல் என்றரல் சரிதான். ( **உத்தரவு நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி உத்தரவில் கோட்டாட்சியர் போட்ட உத்தரவை உறுதி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் பரிகாரம்

தேடிக்கொள்ளவும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

11. வா.சா.ஆ.2 ஆவணமானது சர்வே எண்.126/6B4 ஐ பொறுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணமானது சர்வே எண்.126/6B4 ஐ பொறுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணமானது சர்வே எண்.126/6B4 ஐ பொறுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணமானது சர்வே எண்.126/6B1 மற்றும் சர்வே எண்.126/6B4 ஐ பொறுத்து கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணமானது சர்வே எண்.126/6B1 மற்றும் சர்வே எண்.126/6B4 ஆகிய சொத்துக்களில் உள்ள அடங்கல் ஆகும். வா.சா.ஆ.11 ஆவணமான OS 19/2020 என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பாணையில் கண்டுள்ள சர்வே எண்.126/6B3C என்ற உட்பிரிவில் உள்ள எனது பெயரில் உள்ள பட்டா பி.வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. மேற்படி OS 19/2020 என்ற வழக்கில் பிரதிவாதி சரோஜா தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அவரது மகன் ரமேஷ் சாட்சியாக இருந்தார். பிரதிவாதியின் மகன் மேற்படி வழக்கில் சாட்சி சொல்லவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவின் பேரில் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீடு செய்யவில்லை. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் நான் விளக்கம் கேட்டுள்ளேன்.

13. வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 ஆவணமானது சர்வே எண்.126/6B4 பொறுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணமானது சர்வே எண்.126/6B4 மற்றும் சர்வே எண்.126/6B1 பொறுத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வா.சா.ஆ.7-ஆவணத்தை தவிர பிற ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதிகள் சொத்து சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தனிவட்டாட்சியர் பரிந்துரை செய்ததின் படி சர்வே எண்.126/6B3-ஐ பொறுத்து கையகப்படுத்தப்பட்ட இடத்திற்கு பிரதிவாதிக்கு இழப்பீடு வழங்கலாம் என்றுஉத்தரவு கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் பின்பக்கத்தில் 20 ஆண்டுகள் வயதுடைய தென்னமரங்களுக்கான இழப்பீடு தொகை எனக்கு வழங்கசொல்லியும், நிலத்தின் மதிப்பு சேராஜாவிற்கு வழங்கலாம் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

14. தென்னமரங்களுக்கான இழப்பீடு தொகை எனக்கு வழங்கசொல்லி உத்தரவு வழங்க உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவில்

பிரதிவாதிக்கு இழப்பீட்டு தொகை வழங்கியது சம்மந்தமாக நான் மேல்முறையீடு சென்றேனா என்றால் இல்லை. என்னுடைய வழக்கில் கண்டுள்ள முதல் லக்க சொத்திற்கும் வா.சா.ஆ.7 கண்டுள்ள சொத்திற்கும், பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டுள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கியுள்ள சொத்து சர்வே எண்.126/6B4-ல் கட்டுபட்டுள்ளது என்றால் சரிதான்.

15. வா.சா.ஆ.7 கண்டுள்ள சொத்தின் சர்வே எண்.126/6B3 என்றால் இல்லை சர்வே எண்.126/6B4-ல் கட்டுப்பட்டது ஆகும். நான் 2016-ம் வருடம் பழனியப்ப செட்டியார் மகன் முத்தையா செட்டியார் என்பவரிடம் 24.2.2016-ம் தேதி சர்வே எண்.126/6B3-ல் 25 சென்டுகளாக 4 ஆவணங்கள் மூலம் 1 ஏக்கர் சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். (**மேற்படி ஆவணங்கள் பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.6 வரை குறியீடு செய்யப்படுகிறது**) பிரதிவாதி வா.சாஆ.7 மூலம் 2012-ல் கிரையம் பெற்ற சொத்தில் 1 ஏக்கர் நிலத்தை 2016-ம் ஆண்டு மோசடியாக பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.6 வரை ஆவணங்கள் மூலம் நான் மோசடியாக கிரையம் பெற்றுள்ளதால் மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.